DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 80/2020 LW- 10 PW- 8

| | |
|---|---|
| Name | : பிரதீபா (மருத்துவர்) |
| Father's/Husband's Name | : சம்பத்குமார் |
| Village | : தோட்டனூத்து அரசு ஆரம்ப சுகாதார மையம் |
| Taluk | : திண்டுக்கல் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 47/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026

( 1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் தோட்டனூத்து அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.09.2018ம் தேதி பகல் 12.45 மணிக்கு நத்தம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, நத்தம், செந்துறையை சேர்ந்த போஸ் மகன் 23 வயதுடைய வேலவேந்தன் என்பவரை அவரது அண்ணன் போகர்சாமி சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை நான் விசாரித்தபோது அவரை தெரிந்த 1 நபர் கையாலும், மண்வெட்டியாலும் 21.09.2018ம் தேதி மாலை 06.30 முதல் 8.00 மணிக்குள் அவரது வீட்டில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தததில் அவருக்கு பின்வரும் காயங்கள் ஏற்பட்டிருந்தது.

1. அவரது இடதுபக்க முகம், காது, கழுத்து, தோள்பட்டை, கை, மணிக்கட்டு ஆகிய இடங்களில் வலி இருப்பதாக கூறினார்.
2. அவருடைய கழுத்தில் 2 x 1 x 0.2 செ,மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.
3. அவரது இடது இடுப்பு மற்றும் வலது முழங்காலில் வலி இருந்ததால் அவரால் அசைக்க முடியவில்லை.
4. நெஞ்சில் வலி மற்றும் இறுக்கமாக இருப்பதாக கூறினார்.
5. இடது கை சுண்டுவிரலில் 0.5 x 0.5 x 0.5 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

அவருக்கு நான் முதலுதவி சிகிச்சை செய்யப்பட்டு, காது, மூக்கு, தொண்டை மற்றும் எலும்பு முறிவு மருத்துவரின் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தேன். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவரின் கருத்துரையை பெற்று அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண தன்மை வாய்ந்தது என்று சான்றுரை வழங்கி சான்று அளித்தேன். ( **விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) மண்வெட்டியால் தாக்கினால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. A.R.காப்பி மட்டும் வாங்கிக்கொண்டு சென்றார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.</u>

2) ஏ.ஆர்.பதிவேட்டில் காயம் பட்ட நபர் 22.09.2018ம் தேதி காலை 12.45 மணிக்கு மருத்துவமனைக்கு வந்ததாக உள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையிலிருந்து சிகிச்சை பெற்றதற்குரிய சான்றை பெற்று தான் நான் காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த ஆவணங்களை நான் போலீசாரிடம் ஒப்படைத்துள்ளேன். நான் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து மருத்துவ குறிப்புகள் பெற்று காயச்சான்றிதழ் வழங்கியதாக வழக்கில் குறிப்பிட்டு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எந்த தேதியில் எனக்கு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்றதற்கான குறிப்புகள் கிடைக்கப்பெற்றது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 27.07.2020ம் தேதி ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன். மண்வெட்டியால் அடித்தால் சிராய்ப்பு காயமோ அல்லது சிறிய காயமோ ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்றால் சரியல்ல.

3) பொதுவாக ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்தால் சிராய்ப்பு காயங்களும், சிறிய காயங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது. 27.07.2020ம் தேதி மதுரை ராஜாஜி மருத்துவமனையில் இருந்து காயம்பட்ட சான்று எனக்கு கிடைத்ததாக எந்த ஆவணங்களும்

இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை போலீசாரிடம் கொடுத்துவிட்டேன். சார்பு ஆய்வாளர் என்னை 27.07.2020ஆம் தேதி விசாரித்ததாக வாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த தேதியில் தான் நான் காய சான்றிதழ் போலீசாரிடம் கொடுத்தேன். அதே தேதியில் தான் எனக்கு மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து காய கருத்துரை வரபெற்றது என்றால் சரிதான். ஏ.ஆர்.பதிவுப்படி சம்பவமானது 21.09.2018ம் தேதி நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு வருடங்கள் கழித்தான் எனக்கு மதுரை அரசு மருத்துவமனையில் இருந்து காய சான்றிதழ் வந்ததா என்றால் ஆமாம். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இரண்டு வருடங்கள் கழித்து பொய்யான காயச்சான்றிதழ் வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.24 16:24:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 80/2020 LW- 8 PW- 9

| | |
|---|---|
| Name | : செல்வம் (பார்வை மகஜர் சாட்சி) |
| Father's/Husband's Name | : லக்கையன் |
| Village | : தொண்டபுரி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 42/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of February 2026

( 1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் நான் செந்துறை பத்திர அலுவலகம் அருகே நின்று கொண்டிருந்தபோது போலீசார் விசாரணைக்காக சம்பவ இடம் வந்ததற்காக சாட்சியாக கேட்டதன்பேரில் வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 12.08.2019ம் தேதி காலை 8.00 மணியளவில் நானும், சின்னக்கண்ணு என்பவரும் செந்துறை சார்பதிவாளர் அலுவலகம் எதிரே கணேசன் என்பவரின் வீட்டின் அருகே வந்து கொண்டிருந்தபோது நத்தம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, படம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்து

சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் கையொப்பம் செய்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்று உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நான் செந்துறை சார் பதிவாளர் அலுவலகம் முன்பாக கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.24 16:24:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்